மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் கால மாக, தமிழகம் தவிர வெளி மாநிலங்களில் 25 இடங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. அந்தக் கண்காட்சிகளின் மூல மாக அரசுக்கு ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற் பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்திற்கான காரணங்களை ஆய்வு செய்தபோது, அதற்கான விளம்பரம் செய்த வகைகளிலே யும் போக்குவரத்து மற்றும் இதர செலவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக செலவுகள் மேற் கொண்டதன் காரணமாகத்தான் இழப்பு ஏற்பட்டது என் பதை அறிந்து இனி வரும் எதிர்காலங்களில், இந்த இழப்புகள் ஏற்படா வண்ணம் நடைபெறுகிற கண்காட்சிகளின் மூலம் லாபம் ஈட்டுகிற வகையிலேயும், நடைபெற இருக்கிற கண் காட்சிகளின் மூலம் லாபம் ஈட்டுகிற வகையிலும், இந்த அரசு அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து வருகிறது.

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைத்தல்.

*5497 திரு. கே. சின்னசாமி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*8318 திரு. ப. சுந்தரம் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது மலை நெல்லிவாசல் நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாதுமலை நெல்லிவாசல் நாட்டில் ஆரம்ப சுகர்தார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை,

[1990 ஆகஸ்ட் 20

திரு. ப, சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிவாசல்நாடு ஜவ்வாது மலையிலே உள்ளது. அந்த ஜவ்வாது மலைக்கும் நெல்லிவாசல்நாட்டிற்கும் போக்குவரத்து வசதி இல்லை. அங்கே ஏறக்குறைய 15 கிராமங்கள் சுற்றி இருக்கின்றன. அதனால் இதை மறு பரிசீலனை செய்து அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் ஏதேனும் உத்தேசம் உள்ளதா? இனியாவது உத்தேசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிவாசல்நாட்டிற்கு அருகில் உள்ள புதுநாடு என்னும் இடத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது நெல்லிவாசல் நாட்டில் புதியதாக ஒரு சுகாதார நிலையத்தை துவக்குகின்ற கருத்துரு எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதுநாட்டிற்கும் நெல்லிவாசல்நாட்டுக்கும் இடையே ஏறக்குறைய 16 கிலோ மீட்டர் இருக்கிறது. அங்கிருந்து எந்தப் பகுதியிலேயும் போக்குவரத்து இல்லாத காரணத்தால் அங்கே நோய்வாய்ப்படுகின்றவர்களை கட்டில் மேலே தூக்கி வருகின்ற காலக் கட்டத்தில்தான் அந்த இடம் இருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்காகவும், அங்குள்ள மலை வாழ் மக்களை வாழ வைப்பதற்காகவும் அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு விரிவுபடுத்துகிறபோது, அதனுடைய எண்ணிக்கையை அதிகரிக்கின்றபோது, அதனுடைய இந்தக் கருத்துருவையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை, நெல்லிவாசல் நாட்டைச் சுற்றி 15 கிராமங்கள் இருக்கின்றன என்பதோடு அங்குள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதி இல்லை என்பதையும் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அத்தோடு ஆசிரியர்கள், வனப் பணியாளர்கள் இவர்கள் எல்லாம், இந்த அடிப்படை வசதி கூட இல்லாத காரணத்தால் மிகவும் சிரமப்படுகிறார்கள். அங்கு பணி செய்கிற ஆசிரியர்கள் பல மாதங்களுக்கு ஒரு முறைதான்

1990 ஆகஸ்ட் 20] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அந்தப் பணிகளுக்கே செல்லுகிறார்கள். வனப் பணியாளர்களும் அங்கே அடிக்கடி செல்வது இல்லை. அவர்கள் நோய்வாய்ப் பட்டால் அவர்களுக்கு மருத்துவ வசதி கூட அங்கே இல்லை என்பது முக்கியமான காரணங்களிலே ஒன்று. எனவே நெல்லி வாசல்நாட்டில் அருள்கூர்ந்து அந்த மலை ஜாதி மக்களுக்காக இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா அல்லது நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியிருக்கிற கருத்துக்களையும் பரிசீலனை செய்ய, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவு படுத்துகின்றபோது, எண்ணிக்கையை அதிகரிக்கின்ற போது நிச்சயமாக கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு பதவி உயர்வுக்காக உயர்மட்டக் குழு.

* 6511 திரு. ஏ. தங்கராஜ்:
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிடர்களுக்கு பதவி உயர்வுக்காக உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: தலைவர் அவர்களே,
இல்லை.
மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

பேரவைக் கூட்டத் தொடரின் முதல் நாளில் ''வினா விடை நேரம்'' இடம் பெறுவது குறித்தும் சில உறுப்பினர்களின் இருக்கைகள் மாற்றப்பெற்றுள்ளது தொடர்பாக நீதிமன்றத்திலும், குடியரசுத் தலைவரிடத்திலும், அவையிலும் எழுப்பப் பெற்றுள்ள பிரச்சினைகள் குறித்தும்.

திரு. கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கும்படியான உறுப்பினர்கள் உட்காருவதற்கு இருக்கும்படியான இடங்களைத் தீர்மானித்து, இருக்கைகளைத் தீர்மானித்து, அதற்கான உத்திரவுகளைப் போடும்படி